PEaCE

# சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம்

ecpat Sri Lanka

## விழிப்புணர்வு வழிகாட்டி



VicenteFerrer

*Transforma la sociedad en humanidad*

# சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம்

## விழிப்புணர்வு வழிகாட்டி

எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாக்கும் (PEaCE) எனப்படும் ECPAT Sri Lanka அமைப்பினால் தயாரிக்கப்பட்ட சிறுவர் பாலியல் துஷ்பிரயோக விழிப்புணர்வு வழிகாட்டிக்கு உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். இந்த வழிகாட்டி பெற்றோர், ஆசிரியர்கள், சமூக தலைவர்கள், ஊடகவியலாளர்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான பணியில் ஈடுபடும் அனைவருக்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. இது பாலியல் துஷ்பிரயோகத்தில் இருந்து சிறுவர்களை பாதுகாக்க உதவும் சுலபமான மற்றும் நடைமுறை வழிமுறைகளை வழங்குகிறது.

இந்த வழிகாட்டியில் உள்ள உள்ளடக்கங்கள், எளிய விளக்கங்களுடன் சேர்ந்து கலாச்சார ரீதியாக பொருத்தமான விளக்கப் படங்களை உள்ளடக்கியுள்ளது. இதனால் ஒவ்வொரு கருத்தையும் புரிந்து கொள்வது மட்டுமல்லாமல், உங்கள் சமூகத்துடன் பகிர்வதும் எளிதாகும்.

Fundación Vicente Ferrer அமைப்பின் நிதியுதவியுடன் “சிறுவர் பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகத்தை தடுத்தல்” செயல் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட இந்த வழிகாட்டி, விழிப்புணர்வு நிகழ்வுகள், பயிற்சி பட்டறைகள், சமூகக் கூட்டங்கள் மற்றும் கல்வி நிகழ்ச்சிகளில் நாடெங்கிலும் பயன்படுத்தப்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. நீங்கள் கிராமத்தில் கலந்துரையாடலை முன்னெடுக்கவும், வகுப்பறையில் விவாதத்தை வழிநடத்தவும், அல்லது செய்தி அறிக்கையை தயாரித்தல் போன்ற எதுவாக இருந்தாலும், இங்கு வழங்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் விளக்கங்கள் உங்கள் செயல்பாடுகளில் நம்பிக்கையுடன் ஈடுபட உதவும்.

இந்த வழிகாட்டி, எங்கள் மதிக்கத்தக்க பங்குதாரர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. இது ஓர் இலவச பதிப்பு. இதை அச்சிட்டு அல்லது பகுதிகளாக பிரதியிட்டு விநியோகிக்க தயங்காதீர்கள்.

# அறிமுகம்



சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் ஒரு பிள்ளையின் கண்ணியம், மரியாதை, பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகளை கடுமையாகக் களங்கப்படுத்தும் செயற்பாடுகளில் ஒன்றாகும். இது எல்லா சமூகத்திலும் நிகழக்கூடியது. பாலினம், வயது, சமூக மற்றும் பொருளாதார நிலை, கலாச்சார பின்னணி என்பவற்றைக் கடந்து அனைத்து சமூகங்களில் உள்ள சிறுவர்களை பாதிக்கிறது.

விழிப்புணர்வு அதிகரித்து வந்தாலும், இந்த தலைப்பு இன்னமும் பெரிதும் களங்கப்படுத்த பட்டதாகவே இருக்கிறது. பெரும்பாலும் மறைக்கப்படுகிறது. இதனால் எண்ணற்ற சிறுவர்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைக்கு உள்ளாகின்றனர். மேலும் பல சிறுவர்கள் எந்த ஒரு ஆதரவும் இன்றி மீண்டெழுகின்றனர்.

இந்த வழிகாட்டி, பெற்றோர்கள், ஆசிரியர்கள், சிறுவர் பராமரிப்பாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தின் உண்மை தன்மைகள் பற்றி அறிவூட்டுவதே இதன் நோக்கம். இது தவறான நம்பிக்கைகளை களைந்து விழிப்புணர்வை உயர்த்துவதற்கும், துஷ்பிரயோகத்தை அடையாளம் கண்டு அதை தடுக்க சரியான முறையை கையாள தேவையான அறிவை வழங்குவதற்கும் உதவுகிறது.

இதன் உள்ளடக்கம் ஆராய்ச்சிகள், துன்புறுத்தலை அனுபவித்தவர்களின் பகிர்வுகள் மற்றும் நடைமுறை அடிப்படையிலான பார்வைகளை ஆதாரமாகக் கொண்டு தெளிவான மற்றும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் அமைந்துள்ளது.


இந்த வழிகாட்டியின் இறுதியில், பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவக்கூடிய நிறுவனங்களின் விவரங்களையும் காணலாம். தயவுசெய்து தேவைப்படும் போது அவர்களுடைய ஆதரவை நாடுங்கள். சிறுவர்களுக்கான பாதுகாப்பான உலகை உருவாக்க ஒன்றிணைந்து செயல்படுவோம்.

# சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தை புரிந்துகொள்ளல்

- சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்பது ஒரு பிள்ளையை பாலியல் செயல்களில் ஈடுபடுத்துவதை குறிக்கிறது. இது தவறான தொடுதல் மற்றும் தொடுதல் இன்றி நடைபெறும் செயல்களாக இருக்கலாம்.

- பாலியல் துஷ்பிரயோகம் ஆண்களாலும், பெண்களாலும் நிகழக்கூடியது. இதில் ஈடுபடும் துஷ்பிரயோகிகள் பெரியவர்கள், இளைஞர்கள் அல்லது பிற சிறுவர்களாக கூட இருக்கலாம்.

- பாலியல் துஷ்பிரயோகம், ஒரு பிள்ளையின் உடல், உள்ளுணர்வு மற்றும் உளவியல் நலனில் குறுகிய காலத்திலும் நீண்ட காலத்திலும் தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும்.



# சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்றால் என்ன?

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், ஒரு பிள்ளை முழுமையாக புரிந்து கொள்ளாத நிலையிலும், சம்மதம் தெரிவிக்க முடியாத நிலையிலும் நிகழ்கிறது. இது ஒரு பிள்ளையை ஏமாற்றி, கட்டாயப்படுத்தி, கபடமாக கையாண்டு அல்லது வற்புறுத்தி பாலியல் நடத்தைகளில் ஈடுபடுத்துவதை உள்ளடக்கிறது.



இது உடல் ரீதியான தொடர்பு அதாவது தவறான தொடுகை அல்லது உடலுறவு கொள்ளல் போன்றவையால் நடக்கும். அல்லது தொடுகை அற்ற நடவடிக்கைகளாகவும் இருக்கலாம். உதாரணமாக ஒரு பிள்ளைக்கு பாலியல் ஆவணங்களை காண்பித்தல், நிர்வாணத்தை காட்டுதல் அல்லது ஆன்லைன் மூலம் பாலியல் இடையூறு செய்வது போன்றவை அடங்கும். முக்கியமாக, சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்றால் எப்போதும் கொடூரமான வன்முறை அல்லது கட்டாயப்படுத்தல் எனப் பொருளல்ல. இது ஒரு பிள்ளைகள் தூங்கி கொண்டிருக்கும் நேரத்தில், மதுபானம் அல்லது மருந்து காரணமாக உணர்வின்றி இருக்கும் சூழலில் அல்லது அன்பு, மிரட்டல், லஞ்சம் வழங்குவதன் மூலமாகவும் நிகழக்கூடும். பல நேரங்களில், இந்த துஷ்பிரயோகம் அதிகாரத்தில் உள்ள பெரியவர்கள் அல்லது இளைஞர்கள் பிள்ளைகள் தன் மீது கொண்ட நம்பிக்கையை அல்லது தன்னை சார்ந்த நிலையை தவறாக பயன்படுத்திய நிலையிலும் நிகழ்கின்றது.

**சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்றால் என்ன?** இது ஒரு பிள்ளையின் மீது நிகழ்த்தப்படும் பாலியல் செயல்களை குறிக்கிறது. வயது, அறிவு அல்லது வளர்ச்சியின்மை காரணமாக சம்மதம் வழங்கத் திறனில்லாத ஒரு பிள்ளையின் மீது கட்டாயமாக மேற்கொள்ளப்படும் அனைத்து வகையான பாலியல் செயல்களும் பாலியல் துஷ்பிரயோகமாகக் கருதப்படுகிறது.

# ஏன் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தவறானது?

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்பது ஒரு பிள்ளையின் உரிமைகளையும், நம்பிக்கையையும் உடல் நல அடையாளத்தையும் மீறும் ஒரு மிக மோசமான செயல் ஆகும். சிறுவர்கள் உடல் ரீதியாகவும், உணர்ச்சி ரீதியாகவும், சமூக ரீதியாகவும், அறிவாற்றல் ரீதியாகவும் பாலியல் அனுபவங்களுக்கு தயாராக இல்லாதவர்கள். அவர்களின் உடலும் மனதும், குறிப்பாக பெரியவர்கள் உடனான பாலியல் தொடர்புகளுக்கு முழுமையாக வளர்ச்சி பெறவில்லை. ஒவ்வொரு பிள்ளைக்கும் தனது உடல் மீது சுதந்திரம் கொண்டிருக்கும் உரிமை உள்ளது. யார், எப்போது, எப்படி தங்களைத் தொட வேண்டும் என்பதை தீர்மானிக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு. இந்த உரிமைகளை துஷ்பிரயோகம் பறிக்கிறது.



சில துஷ்பிரயோகிகள், பிள்ளைகள் தன் செயலை ”விரும்புகிறார்கள்” அல்லது இது ”தீங்கற்றது” என்று தங்களையே நம்பச் செய்கிறார்கள். ஆனால், ஆய்வுகள் அதற்கு மாறானதைக் காட்டுகின்றன. துஷ்பிரயோகத்தின் விளைவுகள் பாரதூரமானவையாகவும், பெரும்பாலும் நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியவையாகவும் உள்ளன.

# சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தின் விளைவுகள்

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து மீண்டவர்களுக்கு கீழ்காணும் பாதிப்புகள் ஏற்படக்கூடும்:

- மனச்சோர்வு மற்றும் பதற்றம்
- குற்ற உணர்வு, அவமானம் மற்றும் தங்களைத் தாங்களே குறை கூறுவது
- அதிர்ச்சியால் ஏற்படும் மனஅழுத்தக் கோளாறு (PTSD), துஷ்பிரயோக நிகழ்வுகள் மீண்டும் நினைவுக்கு வருதல், பயங்கர கனவுகள்
- தன்னம்பிக்கையின்மை மற்றும் தன்னை தானே வெறுப்பது
- பாலியலில் குழப்பம் அல்லது நெருக்கமான உறவுகளில் சிரமம்
- ஆபத்தான நடத்தை (உ+ம். போதைப்பொருள் பயன்பாடு, பாதுகாப்பற்ற பாலியல் உறவுகள்)
- நம்பிக்கையுடன் உறவுகளை உருவாக்குவதில் சிரமம்
- கற்றலில் சிக்கல்கள் அல்லது பள்ளியைத் தவிர்க்கும் போக்கு
- தற்கொலை எண்ணங்கள் அல்லது தனக்கு தானே தீங்கு ஏற்படுத்துதல்
- வளர்ந்த பின்பும் மீண்டும் சுரண்டலுக்குள்ளாகும் ஆபத்து - இது மனிதக் கடத்தல், பாலியல் தொழில், மற்றும் உறவுகளில் விரிசல் போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்கலாம்.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தின் விளைவுகள் பல்வேறு வடிவங்களில் வெளிப்படக்கூடும். இதில் பிறரிடம் நம்பிக்கையின்மை, ‘‘நடத்தை கெட்டவர்’’ என்ற உணர்வு, தன்னை பயனற்றவராக உணரும் மனநிலை போன்றவை அடங்கும். தன்னைத்தானே குறை கூறுவதும், தாழ்வான உணர்வுடன் வாழ்வதையும் தூண்டக்கூடும். சில பிள்ளைகள் தனிமையை நாடுவார்கள். மறுபுறம், சிலர் வெளிப்படையான ‘‘வெறுப்பான’’ நடத்தை போக்குகளை காட்டுவர். சட்டவிரோத செயல்கள் மற்றும் வன்முறையை கையாள்வார்கள். இவை துஷ்பிரயோகத்தால் ஏற்படும் தீவிர உளவியல் பாதிப்புகளின் வெளிப்பாடுகள்.



# யார் இந்த சிறுவர் பாலியல் துஷ்பிரயோகிகள்?

அதிகமாக துஷ்பிரயோகங்கள் பிள்ளைகளுக்கு நன்கு தெரிந்தவர்களாலும் நம்பிக்கைக்குரியவர்களாலுமே நடைபெறுகிறது. அவர்களில் உறவினர், குடும்ப நண்பர், ஆசிரியர், அதிகாரத்தில் உள்ளவர், நண்பர் அல்லது அண்டை வீட்டினரும் உள்ளனர். பெரும்பாலான துஷ்பிரயோகிகள் வயதான ஆண்களாக இருந்தாலும், பெண்களும் இளம் வயதினரும் இதில் ஈடுபடுகின்றனர்.



துஷ்பிரயோகம் செய்பவர்களில் பலர் உணர்ச்சி முதிர்ச்சி இன்மையாலும் பாலியல் பற்றிய தவறான சிந்தனை உள்ளவர்களாகவும் அல்லது கடந்த கால அதிர்ச்சியுடன் போராடுகிறவர்களாகவே உள்ளனர். சிலர் தாங்களாகவே துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்கள், இருப்பினும் அவர்களில் பெரும்பாலானோர் மற்றவர்களை துஷ்பிரயோகம் செய்வதில்லை.

துஷ்பிரயோகிகள் தங்களின் செயலை நியாயப்படுத்த முயற்சிப்பர். அதாவது, பிள்ளைகளே இவற்றை ஆரம்பித்ததாகவும் இது பிள்ளைகளை மகிழ்ச்சி படுத்துவதற்காகவே செய்தேன் என்றும் கூறுவார்கள். இத்தகைய நியாயப்படுத்தல்களால் பொறுப்பற்ற நபரின் வன்முறை குறையாது. பிறர் தலையிட்டு நிறுத்தும் வரை துஷ்பிரயோகம் தொடரும்.

# சிறுவர் பாலியல் துஷ்பிரயோகிகளின் வகைகள்



**சந்தர்ப்ப குற்றவாளிகள்**
(Situational Abusers)

இவர்கள் சிறுவர்கள் மீது பாலியல் ஆர்வம் கொண்டவர்கள் அல்ல. ஆனால், குறிப்பிட்ட சந்தர்ப்பம், மனஅழுத்தம், போதைப்பொருள் பயன்பாடு, அல்லது பெரியவர்களுடன் நெருக்கமின்மை காரணங்களால் குற்றமிழைகின்றார்கள். அவற்றில் பெரும்பாலானவை வாய்ப்பை பயன்படுத்தும் வகையிலானவை.



**முன்னுரிமை படுத்தும் குற்றவாளிகள்**
(Preferential Offenders)

இவர்கள் சிறுவர்கள் மீது நீண்ட காலமாக பிரத்தியேக பாலியல் ஆர்வத்தை கொண்டுள்ளவர்கள். பிள்ளைகளை தங்களுக்கு பொருத்தமானவர்களாகவே பார்ப்பவர்கள். பெரும்பாலும், இவர்கள் வயது வந்தவர்கள் உடன் நெருக்கமான உறவுகளை பெற முடியாமல் தவிக்கின்றவர்கள். மற்றும் சமூக தனிமைப் படுத்தப் பட்டவர்களாகவும் இருக்கலாம்.



**பாலுறவு வேட்கை குற்றவாளிகள்**
(Fixated Offenders / paedophiles)

இவர்கள் சிறுவர்களிடம் பாலியல் ஈர்ப்பைக் கொண்டிருப்பவர்கள் (மனோ வைத்திய துறையில் “சிறார்பால் காமம் கொண்ட வியாதி” என்று கருதப்படுகிறது). இத்தகையவர்கள் நன்கு திட்டமிட்டு நீண்ட நாள் செயல்களில் ஈடுபடுவர். சிறுவர்களை குறி வைத்து மெதுவாக நெருங்கி அவர்களைத் தங்கள் வலையில் வீழ்த்த முயற்சிப்பவர்கள்.

# மது மற்றும் போதைப்பொருட்களின் பங்கு



போதைப்பொருள் பயன்பாடு கட்டுப்பாட்டை மீறி, தீர்மானிக்கும் திறனை இழந்து துஷ்பிரயோக தூண்டுதல்களில் செயல்பட அதிக வாய்ப்புள்ளது. நெருங்கிய உறவினருடன் தகாப்புணர்ச்சி கொள்வது அல்லது சந்தர்ப்பவாத துஷ்பிரயோக நிகழ்வுகளில், மது ஒரு பங்களிக்கும் காரணியாகும். இருப்பினும், எந்த போதைப்பொருள் பயன்பாடும் துஷ்பிரயோகத்தை நியாயப்படுத்த முடியாது.

# வன்முறை பாலியல் துஷ்பிரயோகம்
## (சிறுவர் பாலியல் வன்புணர்ச்சி)




சில துஷ்பிரயோகிகள் சூட்சமமான முறையை கையாலாமல் பலத்காரத்தை அல்லது மிரட்டலை பயன்படுத்துகின்றனர். அவர்களின் உந்துதல்களில் பின்வருபவை அடங்கும்:

- கோபம்: பிறருக்கு தீங்கு விளைவிப்பதன் மூலம் தங்கள் சினத்தை வெளிப்படுத்துதல்
- அதிகாரம்: மற்றவர்களை கட்டுப்படுத்தும் நிலையை நிலைநாட்டும் முயற்சி
- சாடிசம்: பாலியல் கொடுமை இழைப்பதில் இன்பம் காண்பது (இது அரிதானது ஆனால் ஆபத்தானது)

இந்த வகையான துஷ்பிரயோகங்கள் மிகவும் வன்முறையான மற்றும் அதிக ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடியவை.

# நிகழ்நிலையில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம்



இணையப் பாவனை அதிகரித்துள்ளதால், இன்று சிறுவர்கள் நிகழ்நிலை பாலியல் வேட்டையாடுபவர்கள் இடமிருந்து ஆபத்துகளை எதிர்கொள்கின்றனர். சில துஷ்பிரயோகிகள், தங்களை நண்பர்களாக காட்டுகிறார்கள். சமூக ஊடகம் அல்லது அரட்டை செயலிகள் வழியாக சிறுவர்களை வசப்படுத்தி ஆபாச உள்ளடக்கங்களை பகிர வலியுறுத்துகிறார்கள். இது கொடுமைப் படுத்துதல், பாலியல் துன்புறுத்தல், கடத்தல் அல்லது நேரடி ஒளிபரப்பு துஷ்பிரயோகத்திற்கு வழிவகுக்கும்.

இத்தகைய துஷ்பிரயோகிகள், சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோகப் படங்கள் மற்றும் வீடியோக்களை இணையத்தில் பரிமாறிக் கொள்கிறார்கள்.

**பாதுகாப்பு நடவடிக்கைகள்:**

- சிறுவர்களுடன் இணைய பாதுகாப்பைப் பற்றி வெளிப்படையாக கலந்துரையாடுங்கள்.
- அவர்களது நிகழ்நிலை செயல்பாடுகள் மற்றும் பயன்பாட்டு செயலிகளை கவனியுங்கள்
- பெற்றோர் கட்டுப்பாடுகள் மற்றும் வடிப்பான்களை (filters) பயன்படுத்துங்கள்
- எக்காரணத்திலும் ஆபாச புகைப்படங்கள் அல்லது வீடியோக்கள் பகிரக்கூடாது என்று அவர்களுக்கு கற்றுக் கொடுங்கள்
- துஷ்பிரயோகம் நிகழ்ந்தால் உடனே சமூக ஊடகத்தில் உள்ள புகார் அளிக்கும் கருவிகள் அல்லது அதிகாரிகளிடம் புகாரளியுங்கள்

# சிறுவர்கள் இடையிலான பாலியல் துஷ்பிரயோகம்



சிறுவர்களாலும் பாலியல் துஷ்பிரயோகம் நடைபெறுகிறது. குமரப்பருவம் அல்லது அதற்கு முன்னரே சில சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடக்கூடும் என்பது பலருக்கு தெரிந்திருக்காது. இவ்வாறு ஈடுபடும் சிறுவர்கள் கீழ்க்கண்ட ஏழு பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றனர்:

- அப்பாவி பரிசோதனையாளர்கள்: ஆர்வமுள்ளவர்கள், தீங்கு பற்றி அறியாதவர்கள்.
- சமூகமயமாக்கப்படாத சுரண்டல்காரர்கள்: தனிமைப்படுத்தப்பட்டவர்கள், கட்டுப்பாட்டைத் தேடுபவர்கள்.
- போலி-சமூகமயமாக்கப்பட்ட சுரண்டல்காரர்கள்: சமூகத்தில் நன்றாக தோன்றியும் துஷ்பிரயோகம் செய்பவர்கள்.
- தீவிர பாலியல் வெறி கொண்ட இளைஞர்கள்: வன்முறை வரலாறு அல்லது குடும்ப பின்னணியுடன் வாழ்ந்தவர்கள்.
- பாலியல் நிர்ப்பந்தங்கள்: பதற்றம் அல்லது கட்டுப்பாடின்றி செயல்படுபவர்கள்.
- தொந்தரவால் தூண்டப்பட்டவர்கள்: மன ரீதியாக அல்லது உணர்ச்சி ரீதியாக சமநிலை அற்றவர்கள்.
- நண்பர்களின் அழுத்தத்தால் செய்பவர்கள்: சகாக்களின் அழுத்தத்தின் கீழ் செயல்படுபவர்கள்.

மேலும் தீங்கு ஏற்படாமல் தடுக்க மற்றும் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு பிறரின் தலையீடும் சிகிச்சை அளித்தலும் மிக முக்கியமானவை

# ஆபத்துக்கு உள்ளாகக்கூடிய சிறுவர்கள்

பாலியல் துஷ்பிரயோகம் எந்தச் சிறுவரையும், அவர்களின் குடும்பம், மதம் அல்லது சமூக வேறுபாடின்றி பாதிக்கக்கூடும். மேலும், சில காரணிகள் சிறுவர் இந்த ஆபத்துக்குள்ளாகும் சாத்தியத்தை அதிகரிக்கின்றன.

- சொந்த பெற்றோர்கள், குறிப்பாக தந்தை இல்லாமல் வாழும் சிறுவர்கள்
- பெற்றோர் கண்காணிப்பு குறைவான குடும்பங்கள்
- குடும்ப மோதல் அல்லது அலட்சியம் ஏற்படும் சூழ்நிலைகள்
- குறைந்த சுயமரியாதை மற்றும் உணர்வுப் பற்றாக்குறை
- வளர்ப்பு தந்தையுடன் வாழும் சிறுவர்கள் (பெண்களுக்கு அதிக ஆபத்து)
- வறுமையிலும் வன்முறையிலும் வளரும் சிறுவர்கள் (ஆண்களுக்கு அதிக ஆபத்து)

அமைதி இல்லாத அல்லது புறக்கணிக்கப்பட்ட சூழலில் வாழும் சிறுவர்கள், வசப்படுத்தல் (grooming) மற்றும் துஷ்பிரயோகம் போன்ற ஆபத்துக்கு அதிகம் ஆட்படக்கூடியவர்கள்.



## சிறுவர்கள் ஏன் துஷ்பிரயோகம் குறித்து புகார் அளிப்பதில்லை?

அநேகமாக சிறுவர்கள் மௌனமாக இருப்பதற்கான காரணங்கள்:

- அவர்களுக்கு அது துஷ்பிரயோகம் என புரியாததால்
- பெரியவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும் என கற்றுக் கொள்வதால்
- தண்டனை அல்லது குற்றம் சுமத்தப்படும் என்ற பயம்
- முழு குடும்பத்திற்கும் பாதிப்பு ஏற்படும் என்று கவலை
- துஷ்பிரயோகம் செய்பவரால் மிரட்டப்படுவதால்
- பரிசுகள் அல்லது அன்பை பெற்றதால் ஏற்பட்ட குழப்பநிலை
- அவமானம் அல்லது தாங்களே காரணம் என்று எண்ணுவது

சிறுவர் தங்களது அனுபவங்களை கூற முயற்சித்தாலும், பல நேரங்களில் அவர்கள் தவறாக புரிந்து கொள்ளப்படுகிறார்கள் அல்லது நம்ப படுவதில்லை. எனவே, அவர்கள் உண்மைகளை நம்பிக்கையுடன் பகிர்ந்து கொள்ள முடியும் விதமாக, பாதுகாப்பான சூழலையும், பொருத்தமான இடங்களையும் வழங்குவது மிக முக்கியம்.




# துஷ்பிரயோக அறிகுறிகளின் அடையாளங்கள்

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தின் அடையாளங்கள் பெரும்பாலும் உடல் ரீதியாக அல்லாமல் நடத்தை ரீதியாகவே வெளிப்படும்.

சில பொதுவான அடையாளங்கள் பின்வருமாறு:

- பின்வாங்குதல் அல்லது தீவிரத்தன்மை
- பயங்கர கனவுகள் அல்லது படுக்கையில் சிறுநீர் கழித்தல்
- சில குறிப்பிட்ட நபர்களைப் பற்றிய அச்சம்
- காரணமில்லாத வலி அல்லது இரத்தப்போக்கு
- வயதிற்கு மிகுந்த பாலியல் அறிவு அல்லது உரையாடல்
- மன அழுத்தம் அல்லது சுய தீங்கு
- ஒழுங்கற்ற பள்ளி வரவு அல்லது வீட்டை விட்டு ஓடிப்போவது
- உணவு பழக்கத்தில் அல்லது உறக்கத்தில் மாற்றங்கள்




துஷ்பிரயோகத்திற்கான மிகவும் வலிமையான அடையாளங்களில் ஒன்று வயதுக்கு மிகுந்த அளவில் வெளிப்படும் பாலியல் செயல்பாடுகள்.

பல சிறுவர்கள் துஷ்பிரயோகத்தை பற்றிக் கூற முயற்சிக்கிறார்கள். ஆனால், அவர்கள் சொல்வது நிராகரிக்கப்படுகிறது அல்லது தவறாக புரிந்து கொள்ளப்படுகிறது. எனவே, சிறுவர்கள் தங்கள் அனுபவங்களை நம்பிக்கையுடன் பகிரக்கூடிய பாதுகாப்பான சூழலை பெரியவர்கள் உருவாக்க வேண்டும்.

# துஷ்பிரயோகத்திற்கு வழிவகுக்கும் நான்கு காரணிகள்

1. உள்நோக்கம்: துஷ்பிரயோகம் செய்பவருக்கு சிறுவர்கள் மீது பாலியல் ஆர்வம் உள்ளது
2. தடைகளை தாண்டல்: துஷ்பிரயோகிகளின் தார்மீக தடைகளை தாண்டிய செயல் (பெரும்பாலும் மது, போதைப்பொருள் அல்லது ஆபாசத்தைப் பயன்படுத்துதல்)
3. வாய்ப்பு: சிறுவர்களை தனியாக அணுகும் வாய்ப்பு.
4. எதிர்ப்பை சமாளித்தல்: கட்டாயப்படுத்தல், மிரட்டல் அல்லது லஞ்சம் மூலம் சிறுவர்களை கட்டுப்படுத்துதல்.

இந்த காரணிகளில் ஏதேனும் ஒன்றைத் தவிர்த்தாலே துஷ்பிரயோகம் நிகழ்வதற்கான வாய்ப்பு குறிப்பிடத்தக்க அளவில் குறையும்.



# தடுக்கும் வழிகள்



- திறந்த விழிப்புணர்வு: துஷ்பிரயோகம் தவறு என்றும், அது கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் என்ற புரிதலை உருவாக்குதல்.
- ஆபத்தில் உள்ள நபர்களுக்கான ஆதரவு: தீங்கு ஏற்படுவதற்கு முன்பு துஷ்பிரயோகம் செய்ய எண்ணும் நபர்களுக்கு அதை தவிர்ப்பதற்கான ரகசிய உதவி வழங்குதல்.
- வலுவான சட்டங்கள் மற்றும் அமுலாக்கம்: சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் கடுமையான குற்றவியல் குற்றமாக இருக்க வேண்டும். குற்றவாளிகளுக்கு தக்க தண்டனை வழங்கப்படுதல்.
- பாதுகாப்பான சூழல்: பள்ளிகள், வீடுகள் மற்றும் நிறுவனங்களில் சிறுவர்களை தீவிரமாக கண்காணிக்கும் வாய்ப்பை அதிகரித்தல்.
- கல்வி: சிறுவர்களுக்கு உடல் பாதுகாப்பு, ஒப்புதல் வழங்கல், மற்றும் தவறான தொடுதலுக்கு ”வேண்டாம்” என்று சொல்லும் உரிமையைப் பற்றி கற்றுக்கொடுத்தல்.
- பெற்றோரின் ஈடுபாடு: உங்கள் சிறுவர் யாருடன் நேரம் செலவிடுகிறார் என்பதை அறிந்து, அவர்களின் குறைகளை கவனமாக கேட்டறிதல்.

# சமூக காரணிகள்


**சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் பெருகுவதற்கான சூழ்நிலைகள்**

- கடுமையான அதிகாரம் கொண்ட ஆணாதிக்க சமூகங்கள்
- பலவீனமான சிறுவர் பாதுகாப்பு சட்டங்கள் உள்ள கலாசாரங்கள்
- முரண்பாடு அதிகரித்து சமத்துவமற்ற சமுதாயங்கள்
- வறுமை, இடம்பெயர்வு அல்லது பேரழிவுகள் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகள்
- பாலியல் கல்வி, சிறுவர்களின் உரிமைகள் குறித்த விழிப்புணர்வு இல்லாத சூழல்

சமூக மனப்பாங்கை மாற்றி நீதி, கல்வி, மற்றும் சமூக ஆதரவை மேம்படுத்துவது மிக முக்கியம்.



# நல்ல தொடுகை மற்றும் கெட்ட தொடுகை




நல்ல தொடுகை    கெட்ட தொடுகை    பிடிக்காமல் இருக்கலாம்

## நல்ல தொடுகை

- நீங்கள் சோகமாக அல்லது மகிழ்ச்சியில் இருக்கும் போது அம்மா அல்லது அப்பாவிடம் இருந்து கிடைக்கும் அரவணைப்பு
- வகுப்பில் சிறப்பாகச் செயல்படும் போது உங்கள் ஆசிரியரிடமிருந்து கைகுலுக்கல்
- வீதியை பாதுகாப்பாக கடக்க, ஒருவரின் கையைப் பிடித்துக் கொள்வது
- “நன்றாக செய்தாய்” என்பதற்காக முதுகில் இடப்படும் மென்மையான தட்டுதல்
- மருத்துவ காரணங்களுக்காக உங்கள் தாயார் முன், வைத்தியர் உங்களை பரிசோதிப்பது

## கெட்ட தொடுகை

- நெஞ்சு, பிறப்புறுப்புகள் அல்லது பிட்டங்களைத் தொடுவது அல்லது தேய்ப்பது
- வேறொருவரின் அந்தரங்கப் பகுதிகளை தொடும்படி கட்டாயப்படுத்துவது
- ஆடைகளுக்குள் உற்றுப்பார்க்க முயற்சிப்பது அல்லது உடம்பு வெளிப்படுத்தும் வகையில் “ஒளிந்து விளையாட வைப்பது”
- பயமுறுத்தும், சங்கடப்படுத்தும் அல்லது வெட்கப்படுத்தும் எல்லா தொடுதலும்

# பாதுகாக்க இதை செய்யுங்கள்

யாராவது தவறாக நடக்கிறார்கள் என்று பிள்ளைகள் உணரும் போது, அவர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று சொல்லிக் கொடுங்கள்.




"வேண்டாம்!" என்று உரத்த குரலில் தைரியமாக கத்துங்கள்.
உங்கள் குரலை உறுதியாகவும் தெளிவாகவும் பயன்படுத்தி, அந்த நபரின் நடத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும், அருகில் உள்ளவர்களுக்கு உணர்த்துங்கள்.

"செல்" பாதுகாப்பான இடத்திற்கு விரைவாக செல்லுங்கள்.
உங்களை தனிமை படுத்தாது, பாதுகாப்பான இடத்திற்கு விரைந்து சென்று, ஆசிரியர்கள், நண்பர்கள், அல்லது பெரியவர்கள் குழுவோடு இருங்கள்.

"சொல்" நம்பிக்கைக்குரிய ஒரு பெரியவரிடம் கூறுங்கள்.
உங்களை நேசிக்கும் ஒருவர்- பெற்றோர், ஆசிரியர், பயிற்சியாளர், அல்லது அண்டை வீட்டார் போன்றவர்களை தேர்ந்தெடுத்து, நடந்ததை தெளிவாக கூறுங்கள். அவர்கள் உங்களுக்கு உதவ முடியும்.

# சிறுவர் துஷ்பிரயோகத்தை புகாரளிக்க.....

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை



புகாரளிக்க அழையுங்கள் **1929**

## சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம்





புகாரளிக்க அழையுங்கள் **109**

# சமூக பொறுப்பு




சிறுவர்களை பாதுகாப்பது ஒட்டுமொத்த சமூகத்தின் பொறுப்பாகும். ஒரு பிள்ளையின் நலனை பாதுகாக்க, அண்டை வீட்டார், ஆசிரியர்கள், கடைக்காரர்கள், மதத் தலைவர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் கவனமுடன் இருந்தால், துஷ்பிரயோகத்தின் எச்சரிக்கை அறிகுறிகளை முன்னறே கணித்து, தேவையான உதவிகளை உடனடியாக வழங்க முடியும்.

அனைவரும் சிறுவர்களை கண்காணித்து, தகவல்களை பகிர்ந்து, ஒருங்கிணைந்து செயல்படும் போது, அந்த சமூகமே ஒரு பாதுகாப்புச் சுற்றுவட்டமாக மாறுகிறது. இது துஷ்பிரயோகம் நிகழ்வதற்கான வாய்ப்பை குறைக்கிறது.

நாம் அனைவரும் சிறுவர் பாதுகாப்பை பொறுப்பேற்கும் போது, ஒவ்வொரு பிள்ளையும் பராமரிக்கப்பட, மதிக்கப்பட, பாதுகாக்கப்பட வேண்டியவர் என்பதை சமூகத்திற்கு தெளிவான செய்தியை அனுப்புகிறோம்.

# சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தை தடுப்போம்




உடல் எல்லைகளை கற்றுக்கொடுங்கள்: சிறுவர்களிடம் அவர்கள் உடலில் எந்த பகுதிகள் தனிப்பட்டவை என்பதை விளக்குங்கள். அவர்களின் அனுமதி இல்லாமல் யாரும் அந்த இடங்களைத் தொடக்கூடாது என்பதை தெளிவாகக் கூறுங்கள்.

திறந்த தொடர்பை ஊக்குவிக்கவும்: சிறுவர்களுக்கு ஏதேனும் பயமாகவோ அல்லது சங்கடமாகவோ உணர்த்தும் விஷயங்களைப் பற்றிப் பேச அவர்களுக்கு அனுமதி உண்டு என்பதை நினைவூட்டுங்கள். அவர்கள் எப்போதும் உங்களிடம் திறந்து பேசலாம் என நம்பிக்கை அளியுங்கள்.

கண்காணித்து யார் நண்பர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள்: உங்கள் பிள்ளைகள் யாருடன் நேரம் செலவழிக்கிறார்கள், எங்கு செல்கிறார்கள் என்பதை – இணையத்திலும் நிஜ வாழ்க்கையிலும் – அவதானியுங்கள்.

“பாதுகாப்பான” மற்றும் “பாதுகாப்பற்ற ” பட்டியல்களை பயன்படுத்துங்கள்: பாதுகாப்பான பெரியவர்கள் மற்றும் இடங்களை (உதாரணமாக: பள்ளி, காவல்துறையினர்) குறிப்பிட்டு, “தவறான” அல்லது “அசாதாரணமான” சூழ்நிலைகளை அடையாளம் காண பிள்ளைகளை பயிற்றுவிங்கள்.

உணர்வுகளை நம்பச் சொல்லுங்கள்: யாராக இருந்தாலும் – ஏதேனும் தப்பு என்ற உணர்வு வந்தால், “வேண்டாம்” என்று கூறி அந்த இடத்தையும் நபரையும் விட்டு விலக வேண்டும் என்று குழந்தைகளிடம் தெளிவுபடுத்துங்கள்.

உடனடியாக புகாரளிக்கவும்: பிள்ளைகள் ஏதாவது பிரச்சனையை பகிர்ந்தால் அல்லது நீங்கள் எச்சரிக்கை அறிகுறிகளை கவனித்தால், காலதாமதமின்றி அதிகாரப்பூர்வ அமைப்புகளிடம் புகாரளிக்க வேண்டும். (சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை (NCPA): 1929, மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பிரிவு: 109)

சிறுவர்கள் நமது மிகப் பெரிய பொக்கிஷமாகும். பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து அவர்களைப் பாதுகாப்பது பெற்றோர்கள், ஆசிரியர்கள், பராமரிப்பாளர்கள், சமூகங்கள் மற்றும் அரசாங்கங்களின் கூட்டுக் கடமையாகும். ஒவ்வொரு சிறுவரும் பாதுகாப்பாகவும், மரியாதையுடனும், அன்புடனும் வளரத் தகுதியானவர்கள். அந்த வாக்குறுதி யதார்த்தமாக மாறும் ஒரு உலகத்தை ஒன்றாக சேர்ந்து உருவாக்குவோம்.

PEACE

VicenteFerrer

Transforma la sociedad en humanidad

ecpat Sri Lanka